# குன்னூர் நகராட்சி

## தொழில் வரி திருத்தம்/உயர்வு பற்றிய அறிவிப்பு

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 தி 124 டிஇன் படியும், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொழில்வரி விதி 1999யின் விதி 16 (1)ன் படியும் ஒவ்வொரு நகராட்சியிலும் ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள தொழில் வரி ஐந்தாண்டுக்கு ஒருமுறை 25 சதவிகிதத்திற்கு குறையாமலும் 35 சதவிகிதத்திற்கு மேற்படாலும் உயர்வு செய்யப்பட வேண்டும்.

குன்னூர் நகர மன்றம் தனது 28/05/2008ம் தேதிய 744 எண்ணிட்ட தீர்மானத்தில் 01/10/2008 முதல் அரையாண்டு தொழில் வரியை 25% உயர்த்தி நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி 01/10/2008 (2008/09 இரண்டாம் அரையாண்டு) முதல் தொழில்வரி கீழ்க்கண்டவாறு விதிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

### புதிய தொழில்வரி அட்டவணை

| வ. எண். | சராசரி வருமானம் அரையாண்டு | தற்போது அமலில் உள்ள அரையாண்டு தொழில்வரி ரூபாய் | 01/10/2008 முதல் உயர்வு செய்து நிர்ணயிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அரை ஆண்டு தொழில் வரி ரூபாய் |
|---|---|---|---|
| 1. | ரூ.21,000/– வரை | இல்லை | – |
| 2. | ரூ.21,001/–முதல் ரூ.30,000 வரை | ரூ.78/– | ரூ.100/– |
| 3. | ரூ.30,001/–முதல் ரூ.45,000 வரை | ரூ.195/– | ரூ.250/– |
| 4. | ரூ.45,001/–முதல் ரூ.60,000 வரை | ரூ.390/– | ரூ.490/– |
| 5. | ரூ.60,001/–முதல் ரூ.75,000 வரை | ரூ.585/– | ரூ.740/– |
| 6. | ரூ.75,001/–க்கு மேல் | ரூ.780/– | ரூ.980/– |

எனவே, 01–10–2008 முதல் குன்னூர் நகராட்சி எல்லைக்குள் வணிகம் செய்யும் நபர்கள் நிறுவனங்கள் மற்றும் எந்தவொரு தொழில் புரிவோர், உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் மேற்கண்ட அட்டவணை படி தொழில்வரி விதிப்புக்குரியவர் ஆவார்கள். அவர்கள் தாங்கள் செலுத்த வேண்டிய தொழில்வரி தொகையை சுய மதிப்பீடு செய்து படிவம்–2ஐ பூர்த்தி செய்து நகராட்சி அலுவலகத்திற்கு தாக்கல் செய்ய வேண்டுமென அறிவிக்கப்படுகிறது. இது பற்றிய இதர விவரங்களை அலுவலக வேலை நாட்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

(ஒம்) கோ.வெங்கடேசன்,
ஆணையாளர், குன்னூர் நகராட்சி

காலேஜ் அருள்மிகு சண்டிகேஸ்வரா பாலிடெக்னிக் காலேஜ்
(அகில இந்திய தொழில் நுட்பக் கழகம், புதுடெல்லி மற்றும் தமிழக அரசால் அங்கீகாரம் பெற்றது)